**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காங்கேயம்**

**<u>முன்னிலை:–</u> செல்வி.D. தேன்மொழி, பி.ஏ.,பி.எல்., எல்எல்.எம்.,**

குற்றவியல் நீதித்துறை நடுவர், காங்கேயம்

2026 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 07 ம் நாள் திங்கட்கிழமை

**<u>STC – 861/2024</u>**

**<u>(CNR No. TNTI150015192024)</u>**

| Statement as per Rule 106 of the Criminal Rules of Practice, 2019 | | |
|---|---|---|
| 1. | வழக்கு எண். | STC.No: 861 of 2024 |
| 2. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண்.<br>(Name of the Police Station and Crime Number) | அரசுக்காக காவல் ஆய்வாளர்,<br>வெள்ளகோவில் காவல் நிலையம்,<br>(குற்ற எண். 271/2024)<br>... புகார்தாரர் |
| 3. | எதிரியின் பெயர் (Name of the Accused) | கோபாலகிருஷ்ணன் (25/2024),<br>த/பெ. பெரியசாமி,<br>வளந்தான்கோட்டை,<br>இச்சிப்பாளையம்,<br>ஈரோடு மாவட்டம்.<br>... எதிரி |
| 4. | எதிரியின் தந்தை பெயர் (Father's Name) | |
| 5. | எதிரியின் தொழில் (Occupation) | |
| 6. | எதிரியின் முகவரி (Residence) | |
| 7. | எதிரியின் வயது (Age) | |
| 8. | குற்ற நிகழ்வு நாள் (Date of occurrence) | 23.06.2024 |
| 9. | புகார் தேதி (Date of complaint) | 24.06.2024 |
| 10. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் (Date of Arrest) | 01.07.2024 |
| 11. | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் (Date of Release on Bail by Police) | 01.07.2024 |
| 12. | Date of Commitment | Not Applicable |
| 13. | விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி (Date of commencement of Trial) | 12.06.2025 |
| 14. | விசாரணை முடிக்கப்பட்ட தேதி (Closure of Trial) | 24.08.2026 |
| 15. | தண்டனை அல்லது உத்தரவு (Sentence or order) | எதிரியின் மீதான இ.த.ச பிரிவு 279, 337(3 Counts), 338(3 Counts) குற்றச்சாட்டுகள் **அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படாததால்** எதிரி மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளி அல்ல எனத் தீர்மானித்து எதிரியை **கு.வி.மு.ச. பிரிவு 255(1)ன் படி விடுதலை** செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. (ii) எதிரி ஏற்கனவே இந்நீதிமன்றத்திற்கு வழங்கியிருந்த |



D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.09.07 18:37:13 +0530

| | | |
|---|---|---|
| | | பிணைமுறி பத்திரத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது. |
| 16. | தீர்ப்பின் நகல் வழங்குதல் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த முடிவு (Service of copy of judgment or finding on accused) | Yes. Copy of the Judgment uploaded on the CIS and made available on E-courts portal |
| 17. | கால தாமதத்திற்கான காரணம் (Explanation of delay) | No such inordinate delay |

இம்மனுவானது இறுதியாக 24.08.2026ம் தேதியன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, குற்ற முறையிடுபவர்/புகார்தாரர் தரப்பில் வழக்கறிஞர் அரசு குற்ற உதவி வழக்கறிஞர் நிலை 1 காங்கேயம் அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.நவீன்குமார்.,B.C.S.,L.L.B.,(Hons) பி.ஏ.,எல்.எல்.பி., அவர்கள் முன்னிலையாகியும், இதுநாள் வரையில் நிலுவையில் இருந்து வந்த வழக்கின் ஆவணங்கள், சாட்சியங்களை பரிசீலனை செய்த பின்பு இருதரப்பு வாதங்களையும் கேட்டு இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

**தீர்ப்புரை**

இந்த வழக்கில் எதிரியின் மீது சட்டப்பிரிவு 279, 337(3 Counts), 338(3 Counts) இ.த.ச–ன் கீழ் குற்றம் முறையிடப்பட்டுள்ளது.

**1. குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்**

1.1) இவ்வழக்கில், கடந்த 23.06.2024 அன்று பிற்பகல் 03.30 மணியளவில், முத்தூர்– நத்தக்கடையூர் சாலையில், குட்டப்பாளையம் பாலம் அருகே, சாட்சி சண்முகம் என்பவர் TN 41 AK 3776 என்ற TVS XL Super இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்றுகொண்டிருந்தபோது, சாலையின் நடுவில் கிடந்த தேங்காயை எடுப்பதற்காக வாகனத்தைத் திருப்பியுள்ளார். அப்போது, எதிரி கோபாலகிருஷ்ணன் என்பவர் TN 69 BE 6592 என்ற Ashok Leyland Dost வாகனத்தை கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச் சென்று, சண்முகம் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாகவும், அதன் காரணமாக சண்முகம், லதா, சம்பாள், சக்தி மற்றும் விஸ்வநாதன் ஆகியோருக்கு சாதாரண காயம்


D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.09.07 18:37:18 +0530

மற்றும் கொடுங்காயம்  ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது இதச சட்டப் பிரிவுகள் 279, 337(3 Counts) மற்றும் 338(3 Counts)–ன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக அரசு தரப்பில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. நகல்கள் வழங்குதல் மற்றும் குற்றச்சாட்டு வனைதல் :**

2.1) இவ்வழக்கு இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரி அழைப்பாணையின் பேரில் நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் கு.வி.மு.ச. பிரிவு 207–ன் படி எதிரிக்கு வழக்கு ஆவணங்கள் அனைத்தும் 12.06.2025 அன்று இலவசமாக வழங்கி போதிய அவகாசம் கொடுத்து வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து  பார்த்ததில் எதிரி மீது குற்றச்சாட்டு வனைய போதிய முகாந்தரம் இருப்பதாக கருதியதால்  18.07.2025 அன்று எதிரியின் மீது இதச பிரிவுகள் 279, 337(3 Counts)மற்றும் 338(3 Counts) ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்துள்ளார்.

**3. அரசு தரப்பு சாட்சியங்களின் சாட்சியத்திலிருந்து தெரியவரும் வழக்கின் சுருக்கம்:**

3.1) **அ.சா.1 திரு. சண்முகம்** என்பவர் இச்சம்பவத்தில் தான் பாதிக்கப்பட்டது குறித்தும், புகார் அளித்தது குறித்தும் சாட்சியம்  அளிப்பதாக அரசு தரப்பு சாட்சியாக சேர்க்கப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளார்.

3.2) **அ.சா.2 திரு. சண்முகம்** என்பவர் இவ்வழக்கு சம்பவத்தை கேள்விப்பட்டது குறித்து சாட்சியம்  அளிப்பதாக அரசு தரப்பு சாட்சியாக சேர்க்கப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளார்.

3.3) **அ.சா.3  திரு. கோபால்** என்பவர் பார்வை மகஜரில் கையெப்பம் செய்தது குறித்து சாட்சியம் அளிப்பதாக அரசு தரப்பு சாட்சியாக சேர்க்கப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளார்.

3.4) **அ.சா.4 திருமதி. லதா** என்பவர் இவ்வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்தது குறித்து சாட்சியம்  அளிப்பதாக அரசு தரப்பு சாட்சியாக சேர்க்கப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளார்.



D THENMOZHI Digitally signed by D THENMOZHI Date: 2026.09.07 18:37:22 +0530

3.5) **அ.சா.5 திரு. விஸ்வநாதன்** என்பவர் இவ்வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்தது குறித்து சாட்சியம் அளிப்பதாக அரசு தரப்பு சாட்சியாக சேர்க்கப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளார்.

3.6) **அ.சா.6 திரு. சாமிநாதன்** என்பவர் இவ்வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்தது குறித்து சாட்சியம் அளிப்பதாக அரசு தரப்பு சாட்சியாக சேர்க்கப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளார்.

3.7) **அ.சா.7 திரு. சந்திரன்** என்பவர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது குறித்தும், புலன் விசாரணை செய்யப்பட்டு எதிரி மீது குற்ற அறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.17 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**4. கு . வி . மு . ச பிரிவு 313(1)( b ) ன் படி வினவுதல்:**

4.1) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இவ்வழக்கின் எதிரிக்கு பாதகமான விபரங்கள் குறித்து எடுத்துக் கூறி குவிமுச பிரிவு 313(1)(b)ன் கீழ் 24.08.2026 அன்று வினவியபோது எதிரி அரசு தரப்பு சாட்சியங்களை பொய் சாட்சியம் என்றும், மேலும் அவர்களது தரப்பில் விசாரிக்க சாட்சியங்கள் இல்லை என்றும் கூறினார். எனவே எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.


D THENMOZHI Digitally signed by D THENMOZHI Date: 2026.09.07 18:37:27 +0530

## 5. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை

***இவ்வழக்கில் இனி காண வேண்டிய தீர்வு யாதெனில், அரசு தரப்பில் எதிரியின் மீதான இதச பிரிவு 279, 337(3 Counts)மற்றும் 338(3 Counts)—ன் கீழான குற்றச்சாட்டுகள் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.***

## 6. தீர்வு

**6.1)** இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்காவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்யப்பட்டன. இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 279, 337(3Counts) மற்றும் 338(3Counts)—ன் கீழ் எதிரி மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட வேண்டுமெனில், எதிரி தனது வாகனத்தை அஜாக்கிரதையாகவோ அல்லது கவனக்குறைவாகவோ ஓட்டி, அதன் காரணமாக விபத்து ஏற்பட்டு, அதன் விளைவாக பாதிக்கப்பட்ட நபர்களுக்கு சாதாரண காயங்களும் கொடுங்காயங்களும் ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

6.2) இந்த வழக்கில் அரசு தரப்பு முதலாவதாக, விபத்து ஏற்படுத்திய வண்டி அடையாளப்படுத்தலும், இரண்டாவதாக விபத்து ஏற்படுத்திய வண்டியை எதிரிதான் அஜாக்கிரதை அல்லது கவனக்குறைவாக ஓட்டினார் என்றும், மூன்றாவதாக எதிரி வாகனத்தை அவ்வாறு ஓட்டி பாதிக்கப்பட்டவருக்கு கொடுங்காயங்களை ஏற்படுத்தியுள்ளார் என்றும் அரசு தரப்பில் நிரூபிக்க வேண்டும்.

6.3) எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் இந்த வழக்கு விபத்து சம்பவத்திற்குரிய வாகனத்தை எதிரிதான் ஓட்டினார் என்பது அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், விபத்தானது எதிரியால் நடைபெறவில்லை என்றும் இழப்பீடு பெறுவதற்காக இந்த வழக்கு தவறதலாக எதிரியின் மீது பதிவு

செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரி மீதான குற்றம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று எதிரியை விடுதலை செய்யக்கோரினார்.

6.4) இவ்வழக்கில் அரசு தரப்பில் புகார்தாரரும், காயமடைந்த சாட்சியுமான அ.சா.1 சண்முகம் தனது சாட்சியத்தில், சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன்பு, முத்தூர்–நத்தக்காடையூர் சாலையில், சாலையில் கிடந்த தேங்காயை எடுப்பதற்காக தனது இருசக்கர வாகனத்தை சாலையோரம் நிறுத்திவிட்டு நடந்து சென்றபோது, எதிரி ஓட்டி வந்த Dost வாகனம் அதிவேகமாக வந்து தன் மீது மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அவ்விபத்தில் தனது கை பெருவிரலில் பலத்த காயம் ஏற்பட்டு தையல் போடப்பட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், சம்பவத்திற்குப் பின்னர் தனது மருமகனுக்கு தகவல் தெரிவித்து, தனியார் ஆம்புலன்ஸ் மூலம் முத்தூரில் உள்ள CMC மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும், பின்னர் வெள்ளகோவில் காவல் நிலையம் சென்று புகார் அளித்ததாகவும் தெரிவித்துள்ளார். மேலும், இவ்வழக்கில் அ.சா.1ன் முதல் மற்றும் குறுக்கு விசாரணையை ஒப்பிட்டு பரிசீலனை செய்து ஆராய்கையில் வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்பதில் மாற்றம் இல்லை. ஆனால் அந்த விபத்திற்கு எதிரி தான் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும், தகாததுணிச்சலுடன் வாகனத்தை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்பதை காணுதல் வேண்டும். இது தொடர்பாக காணும் போது அ.சா.1 அவரது சாட்சியத்தில் இந்த விபத்திற்கு எதிரிதான் முழுக்காரணம் என்பதும், மேலும், எதிரியின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் தான் விபத்தானது நிகழ்ந்து, என்பதை குறிப்பிட்டு சாட்சியம் அளிக்காதது அரசு தரப்பு வழக்கிற்கு பெரும் பாதகம் ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

6.5) இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சியான அ.சா.2 வெங்கடாச்சலம் தனது சாட்சியத்தில், கடந்த 24.06.2024 அன்று முத்தூர்–நத்தக்கடையூர் சாலையில், குட்டப்பாளையம் பாலம் அருகே, தனது மாமனார் சண்முகம் இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு சாலையில் கிடந்த தேங்காயை எடுக்கச் சென்றபோது, எதிரே வந்த Dost



D THENMOZHI Digitally signed by D THENMOZHI Date: 2026.09.07 18:37:36 +0530

வாகனம் அவர் மீது மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அதில் தனது மாமனாருக்கு தலை மற்றும் கை பெருவிரலில் காயம் ஏற்பட்டதாகவும், பின்னர் அவரை CMC மருத்துவமனையிலும், மேல்சிகிச்சைக்காக ஈரோடு பரணி மருத்துவமனையிலும் அனுமதித்து சிகிச்சை அளித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கில் அ.சா.2–ன் முதல் மற்றும் குறுக்கு விசாரணையை பரிசீலனை செய்கையில், விபத்து குறித்து தனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றும், தொலைபேசி மூலம் தனது மாமனார் தெரிவித்த தகவலின் அடிப்படையிலேயே தான் அறிந்துகொண்டதாகவும் கூறியுள்ளார். எனவே, அ.சா.2–ன் சாட்சியம் கேள்விநிலை சாட்சியமாக (Hearsy evidence) உள்ளதால், மேற்படி விபத்தானது எவ்வாறு நிகழ்ந்தது என்பதை இவரது சாட்சியத்தின் வாயிலாக தெளிவுப்படுத்த வாய்ப்பு இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

6.6) இவ்வழக்கில் அரசு தரப்பில் பார்வை மகஜர் சாட்சியாக அ.சா.3 கோபால் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், கடந்த 24.06.2024 ஆம் தேதியன்று மதியம் 2.00 மணியளவில் போலீசார் விபத்து நடந்த சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

6.7) இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சியான அ.சா.4 லதா தனது சாட்சியத்தில், கடந்த 23.06.2024 அன்று முத்தூர்–நத்தக்கடையூர் சாலையில், குட்டப்பாளையம் அருகே, டாடா ஏஸ் வாகனத்தில் தனது குடும்பத்தினருடன் பயணம் செய்துகொண்டிருந்தபோது, சாலையில் கிடந்த தேங்காயை எடுக்க வந்த நபர் மீது வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அவ்விபத்தில் தனக்கும் உட்பட அனைவருக்கும் காயம் ஏற்பட்டதாகவும், பின்னர் ஆம்புலன்ஸ் மூலம் காங்கேயம் அரசு மருத்துவமனைக்கும், மேல்சிகிச்சைக்காக ஈரோடு பரணி பாவேந்தர் மருத்துவமனைக்கும் அழைத்துச் செல்லப்பட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

இவ்வழக்கில் அ.சா.4—ன் முதல் மற்றும் குறுக்கு விசாரணையை பரிசீலனை செய்கையில், தேங்காய் எடுக்க வந்த நபரால் தான் விபத்து ஏற்பட்டது என்றும், விபத்து குறித்து தனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றும் குறுக்கு விசாரணையில் தெளிவாக ஒப்புக்கொண்டுள்ளார். எனவே, எதிரி வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி விபத்தை ஏற்படுத்தினார் என்பதற்கு அ.சா.4—ன் சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

6.8) இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சியான அ.சா.5 விஷ்வநாதன் தனது சாட்சியத்தில், முத்தூர் — நத்தக்கடையூர் சாலையில் தாங்கள் சென்று கொண்டிருந்தபோது, சாலையின் நடுவில் கிடந்த தேங்காயை எடுத்து ஓரமாக வைப்பதற்காக ஒருவர் சென்றபோது, அவ்வழியாக வந்த Dost வாகனம் அவர் மீது மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அவ்விபத்தில் தனக்கு நெஞ்சில் காயம் ஏற்பட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.5 தனது குறுக்கு விசாரணையில், விபத்து எவ்வாறு நடைபெற்றது என்பது தனக்குத் தெரியாது என்றும், எதிரி ஓட்டி வந்த வாகனம் மெதுவாகத்தான் வந்தது என்றும் கூறியுள்ளார். எனவே, எதிரி தான் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி வந்து இவ்விபத்தை ஏற்படுத்தினார் என்பதை அ.சா.5 ன் சாட்சியத்தின் மூலம் வெளிகொணரப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

6.9) மேலும், அரசு தரப்பு சாட்சியான அ.சா.6 சாமிநாதன் தனது சாட்சியத்தில், முத்தூர்— நத்தக்கடையூர் சாலையில், குட்டப்பாளையம் அருகே, சாலையில் கிடந்த தேங்காயை எடுப்பதற்காக அ.சா.1 சண்முகம் சாலையின் நடுவில் சென்றபோது, தாங்கள் சென்ற Dost வாகனம் அவர் மீது மோதி விபத்து ஏற்பட்டதாகவும், ஆஜரான எதிரிதான் மேற்படி வாகனத்தை ஓட்டி வந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், குறுக்கு விசாரணையில், தாங்கள் சென்ற வாகனம் மெதுவாகத்தான் சென்றது என்றும்,



D THENMOZHI Digitally signed by D THENMOZHI Date: 2026.09.07 18:37:45 +0530

தேங்காய் எடுக்கச் சென்ற அ.சா.1 சண்முகத்தினால்தான் விபத்து ஏற்பட்டது என்றும் கூறியுள்ளார். எனவே, விபத்து எதிரியின் அஜாக்கிரதையான அல்லது கவனக்குறைவான வாகன ஓட்டுதலின் காரணமாகவே ஏற்பட்டது என்பதைவிட, சாலையில் கிடந்த தேங்காயை எடுப்பதற்காக அ.சா.1 சாலையின் நடுப்பகுதிக்குச் சென்றதே விபத்திற்கான காரணமாக இருந்ததாக அ.சா.6—ன் சாட்சியத்திலிருந்து தெரியவருகிறது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

6.10) மேலும், இவ்வழக்கில் புலனாய்வு அதிகாரியாக விசாரிக்கப்பட்ட அ.சா.7 சந்திரன் தனது சாட்சியத்தில், அ.சா.1 சண்முகம் அளித்த எழுத்துப்பூர்வமான புகாரின் அடிப்படையில் குற்ற எண்.271/2024, 279, 337 IPC—ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாகவும், பின்னர் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்து, சாட்சிகளின் வாக்குமூலங்களைப் பதிவு செய்ததாகவும் தெரிவித்துள்ளார். மேலும், எதிரியை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்ததாகவும், விபத்தில் தொடர்புடைய Ashok Leyland Dost வாகனம் மற்றும் TVS XL Super இருசக்கர வாகனம் ஆகியவற்றை மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தி, அதற்கான அறிக்கைகளைப் பெற்றதாகவும், காயமடைந்த சாட்சிகளின் மருத்துவ ஆவணங்களைப் பெற்று, சண்முகம், லதா மற்றும் சம்பாள் ஆகியோருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயம் என தெரியவந்ததையடுத்து, வழக்கின் சட்டப்பிரிவை 279, 337 IPC—லிருந்து 279, 337, 338 IPC ஆக மாற்றி, புலன் விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

6.11) மேலும், விபத்தில் பாதிக்கப்பட்ட நபர்களான சக்தி, சண்முகம், லதா மற்றும் சம்பாள் ஆகியோருக்கு முதல் உதவி சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி. இன்னொசென்ட், சக்தி என்பவருக்கு இடது கையில் ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்றும், சண்முகம் என்பவருக்கு வலது கை பெருவிரலில் ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்றும், லதா என்பவருக்கு வலது கை மணிக்கட்டில் ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்றும், சம்பாள் என்பவருக்கு வலது கையில் ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்றும்



D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.09.07 18:37:50 +0530

சான்றளித்துள்ளார். மேற்படி அ.சா.ஆ.12 முதல் அ.சா.ஆ.15 வரையிலான காயச்சான்றிதழ்களை பரிசீலனை செய்யும்போது, விபத்தில் சக்தி, சண்முகம், லதா மற்றும் சம்பாள் ஆகியோருக்கு காயங்கள் ஏற்பட்டது என்பது மருத்துவச் சாட்சியத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

6.12) மேலும் இந்த வழக்கில் அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள அ.சா.ஆ.5 மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் படி விபத்துக்கு வாகனத்தின் இயந்திரக்கோளாறுகள் ஏதும் காரணமில்லையெனவும் தெரிய வருகிறது. ஆனால் ஏற்கனவே கண்ட பரிசீலனைகளின் படி மேற்படி வாகனத்தை எதிரி தான் ஓட்டி வந்தார் என்று அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படாததால் மேற்படி வாகனத்தில் உள்ள சேதத்தை மட்டும் எடுத்துக்கொண்டு இந்த வழக்கு சம்பவத்தில் எதிரி தான் ஈடுபட்டார் என கூற முடியாது.

6.13) அ.சா.1 முதல் 6 வரையிலான அரசு தரப்பு சாட்சியங்கள் தகுந்த சாட்சியம் அளிக்காத நிலையில் இவ்வழக்கில் வழக்கு கோப்புகளை பார்வையிட்டு அதனடிப்படையில் கூடுதல் சாட்சியம் அளித்துள்ள உதவி ஆய்வாளர் திரு. சந்திரன் (அ.சா.7)ன் சாட்சியத்தை மட்டும் நிலைமுறை சாட்சியமாக எடுத்துக்கொள்ள முடியாது. மேற்படி அ.சா.7 ன் சாட்சியத்தை வைத்துக்கொண்டு, எதிரி மீதான வழக்கினை தீர்மானிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேற்காண் சூழ்நிலைகளும், அ.சா.1 ன் சாட்சியமும் எதிரி மீதான அரசு தரப்பு வழக்கின் மீது பெரும் சந்தேகத்தினை ஏற்படுத்துகின்றது.

6.14) மேற்படி சாட்சியங்களை வைத்து அரசு தரப்பு வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று உறுதி செய்ய இயலாது. ஏனெனில் அ.சா.1 புகார்தாரர் சாட்சியாகவும், காயம்பட்ட சாட்சியாகவும் உள்ளார். மேலும், இவ்வழக்கில் அ.சா.4 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட சாட்சிகளாக உள்ள நிலையில் அ.சா.1, அ.சா.4, அ.சா.5, அ.சா.6


D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.09.07 18:37:55 +0530

ஆகியோர்களின் சாட்சிகள் இவ்வழக்கிற்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. ஆனால் மேலே விவரிக்கப்பட்டுள்ளவாறு அ.சா.1, அ.சா.4, அ.சா.5, அ.சா.6 வரையிலானவர்கள் எதிரியின் குற்றங்களை நிரூபணம் செய்யும் வகையில் தெளிவாக எந்தவொரு சாட்சியமும் அளிக்கவில்லை. மேற்படி சாட்சிகள் வழக்கு சம்பவத்தன்று எதிரி தான் வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் மற்றும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்பது குறித்து சாட்சியம் அளிக்கவில்லை. எனவே அரசு தரப்பு வழக்கினை நிரூபணம் செய்யும் வகையில் சாட்சியம் அளித்திடாதது அரசு தரப்பிற்கு பாதகமாக அமைவதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

6.15) மேற்படி பரிசீலனைகளின் அடிப்படையில் எதிரியின் மீதான இ.த.ச.பிரிவு 279, 337(3 Counts) மற்றும் 338(3 Counts) ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசுதரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து அவரை விடுதலை செய்வது நீதியின்பால் உகந்தது என கருதி, அவ்வாறே தீர்மானித்து மேற்கண்ட பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

**இறுதியாக,**

*(i) எதிரியின் மீதான இ.த.ச பிரிவு 279, 337(3counts) மற்றும் 338(3 Counts) ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படாததால் எதிரி மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளி அல்ல எனத் தீர்மானித்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 255(1)ன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.*

*(ii) எதிரி ஏற்கனவே இந்நீதிமன்றத்திற்கு வழங்கியிருந்த பிணைமுறி*


D THENMOZHI Digitally signed by D THENMOZHI Date: 2026.09.07 18:38:00 +0530

*பத்திரத்தை மேல்முறையீட்டு காலத்திற்குபின் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. எனவே, வழக்கு சொத்து குறித்து தனியாக எந்த உத்தரவும் இல்லை.*

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 07 ஆம் நாள், திறந்த நீதிமன்றத்தில் வைத்து அவையறிய பகரப்பட்டு, அன்றே CIS–ல் பதிவேற்றம் செய்யப்பட்டு, E–Courts இணையதளத்தில் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.09.07 18:38:05 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்
காங்கேயம்.

**<u>இணைப்பு:</u>**
**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>**:

| அ.சா வரிசை எண் | பெயர்கள் | விளக்கம் | முதல் விசாரணை தேதி | குறுக்கு விசாரணை தேதி |
|---|---|---|---|---|
| அ.சா.1 | திரு. சண்முகம் | புகார்தாரர் சாட்சி | 12.03.2026 | 12.03.2026 |
| அ.சா.2 | திரு. வெங்கடாச்சலம் | கேள்விநிலை சாட்சி | 12.03.2026 | 12.03.2026 |
| அ.சா.3 | திரு. கோபால் | பார்வை மகஜர் சாட்சி | 12.03.2026 | 12.03.2026 |
| அ.சா.4 | திருமதி.லதா | கண்ணுற்ற/ பாதிக்கப்பட்ட சாட்சி | 20.07.2026 | 20.07.2026 |

| | | | | |
|---|---|---|---|---|
| அ.சா.5 | திரு.விஸ்வநாதன் | கண்ணுற்ற/ பாதிக்கப்பட்ட சாட்சி | 10.08.2026 | 10.08.2026 |
| அ.சா.6 | திரு.சாமிநாதன் | கண்ணுற்ற/ பாதிக்கப்பட்ட சாட்சி | 10.08.2026 | 10.08.2026 |
| அ.சா.7 | திரு.சந்திரன் | புலன் விசாரணை அதிகாரி | 10.08.2026 | 10.08.2026 |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>** :

| வரிசை எண் | விளக்கம் | சாட்சி |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் வாக்குமூலம் | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | பார்வை மகஜர் | அ.சா.2 |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை (FIR) | அ.சா.7 |
| அ.சா.ஆ.4 | மாதிரி வரைபடம் | அ.சா.7 |
| அ.சா.ஆ.5 | TN 69 BE 6592 Ashok Leyland Dost மோட்டார் வாகன ஆய்வறிக்கை | அ.சா.7 |
| அ.சா.ஆ.6 | TN 41 AK 3776 TVS XL Super மோட்டார் வாகன ஆய்வறிக்கை | அ.சா.7 |
| அ.சா.ஆ.7 | விபத்து பதிவேடு நகல் (சக்தி) | அ.சா.7 |
| அ.சா.ஆ.8 | விபத்து பதிவேடு நகல் (சம்பூர்ணம்) | அ.சா.7 |
| அ.சா.ஆ.9 | விபத்து பதிவேடு நகல் (லதா) | அ.சா.7 |
| அ.சா.ஆ.10 | விபத்து பதிவேடு நகல் (சாமிநாதன்) | அ.சா.7 |
| அ.சா.ஆ.11 | விபத்து பதிவேடு நகல் (விஸ்வநாதன்) | அ.சா.7 |
| அ.சா.ஆ.12 | காயச்சான்று (சண்முகம்) | அ.சா.7 |
| அ.சா.ஆ.13 | காயச்சான்று (சக்தி) | அ.சா.7 |
| அ.சா.ஆ.14 | காயச்சான்று (சம்பாள்) | அ.சா.7 |
| அ.சா.ஆ.15 | காயச்சான்று (லதா) | அ.சா.7 |
| அ.சா.ஆ.16 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.7 |

**அரசு தரப்பு சான்றுப்பொருட்கள்**

இல்லை.

**எதிரி தரப்பு சாட்சிகள், எதிரி தரப்பு சான்றாவணங்கள், எதிரி தரப்பு சான்று பொருள்கள்:-**

இல்லை.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.09.07 18:38:11 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்.

**குறிப்பு:**

1. வழக்கு விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்து வந்துள்ளார்.
2. எந்தவொரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. முடிவாக, எதிரி வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்டார்.
4. வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
5. தீர்ப்புரை நகல் கனம் முதன்மை நீதித்துறை நடுவர் திருப்பூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.